# இம்மாக்குலேட் மகளிர் கல்லூரி

## சின்ன கங்கணாங்குப்பம் , கடலூர்

கடலூர் ,சின்ன கங்கணாங்குப்பத்தில் உள்ள இம்மாக்குலேட் மகளிர் கல்லூரியின் தமிழ்த்துறையில் தமிழினி சங்கம் சார்பில் 18.03.2024 அன்று "தாய்மொழி வழி கல்வியின் அவசியம்" குறித்த கருத்தரங்கினை ஏற்பாடு செய்தனர். இந்நிகழ்விற்கு கல்லூரியின் செயலர் அன்னை தலைமை வகித்தார் .முதல்வர் மற்றும் மனித வள மேம்பாட்டு அலுவலர் முன்னிலையில் துறைத் தலைவர் வழிகாட்டலில் கருத்தரங்கு நடைபெற்றது. இதில் கடலூர் மாவட்ட பாரதிதாசன் இலக்கிய மன்ற தலைவர் தமிழ் செம்மல் விருதாளர் கவிஞர் கடல் நாகராஜன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு அரிய பல தகவல்களை மாணவியர்களுக்கு வழங்கினார். தமிழ்த் துறை மாணவியர்கள் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.





